மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

முன்னிலை : - **திரு மதி.A. சீத்தாலெட்சுமி, M.A.,B.L.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி , மன்னார்குடி

2024 ஆம் ஆண்டு ஜீலை மாதம் 03 ஆம் நாள் புதன்கிழமை

திருவள்ளுவராண்டு 2054 ஸ்ரீ குரோதி வருடம் ஆனித்திங்கள் 19 ஆம் நாள்

**இடைநிலை மனு எண். 179/2023-ல்**

**அசல் வழக்கு எண். 126/2016**

-

1. திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி டி.மு.இலாகா, மன்னார்குடி டவுன், நெ.5-ஏ, காமாட்சியம்மன் கோவில் தெருவில் வசிக்கும் லேட். கிருஷ்ணமூர்த்தி மனைவி, 45 வயதுள்ள கண்ணம்மாள் .
2. திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி டி.மு.இலாகா, மன்னார்குடி டவுன், நெ.5-ஏ, காமாட்சியம்மன் கோவில் தெருவில் வசிக்கும் லேட். கிருஷ்ணமூர்த்தி மகள், 25 வயதுள்ள சித்ரா.
3. திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி டி.மு.இலாகா, மன்னார்குடி டவுன், நெ.5-ஏ, காமாட்சியம்மன் கோவில் தெருவில் வசிக்கும் லேட். கிருஷ்ணமூர்த்தி மகள், வீட்டுக்குடித்தனம், 23 வயதுள்ள செல்வி.

...மனுதாரர்கள் /வாதிகள்

// எதிர்//

1. திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி டி.மு.இலாகா, மன்னார்குடி டவுன், நெ.11/5 காமாட்சியம்மன் கோவில் தெருவில் வசிக்கும் லேட். பக்கிரிசாமி மகன் சுமார் 32 வயதுள்ள பிரகாஷ்.
2. சார்பதிவாளர், மன்னார்குடி.
3. மாவட்ட ஆட்சியர், திருவாரூர்

... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது வரைவு எழுவினாவை ஏற்று அசல் வழக்கில் மூன்றாவதுஜ எழுவினாவாக சேர்த்துக்கொண்டு வழக்கை மேல் நடத்த உத்தரவிடக்கோரி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 14 விதி1 மற்றும் பிரிவு 151-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**இம்மனு தாக்கல் ஆன நாள்** :- 28.04.2023. 23.06.2023, 05.07.2023

**இம்மனு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள்** :- 07.07.2023

இம்மனுவின்மீது ரூ. 20/- நீதிமன்றக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

இம்மனு என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. A, தினகரன் அவர்களும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. S.விஜயன் அவர்களும், 2,3ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் திரு. V. சச்சிதானந்தம் அவர்கள் முன்னிலையாகி எதிருரை இல்லை என்று மேற்குறிப்பு செய்ததன்பேரில், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**தீர்ப்பாணை உத்தரவு**

1. இம்மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.
2. செலவுத்தொகை குறித்து உத்தரவு இல்லை.

2024ம் ஆண்டு ஜீலை மாதம் 03-ம் நாள் என்னுடைய கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

**(ஒம்/-A.சீதாலெட்சுமி),**
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.